# Pradhan Mantri Awas Yojana (PMAY-U)

**Monitoring mechanisms for demand survey entry, Beneficiaries attachment and Aadhaar Seeding in MIS System**

**SLNA – Tamil Nadu Slum Clearance Board**

# PROFILE – TAMIL NADU




| | |
|---|---|
| **Area** | **1,30,058 sq.km** |
| **Population**<br>(as per Census 2011) | **7,21,38,958** |
| **Urban Population**<br>(as per Census 2011) | **3,49,17,440**<br>**(48.40%)** |
| **Urban Slum Population**<br>(as per Census 2011) | **57,98,459**<br>**(8.04%)** |

## Statutory Towns

Corporations -12

Town Panchayats -528

Total - 666

Municipalities- 124

Contonment Boards -2

# Demand Survey

Total Demand in 666 Statutory Towns -13,91,609

## Housing assessment ULB wise

| ULBs | Under Vertical | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1- ISSR | 2- CLSS | 3 - AHP | 4 - BLC | Total | % |
| Chennai Corporation | 23516 | 110574 | 125203 | 92512 | 351805 | 25% |
| **11** Corporations | 20587 | 94274 | 66469 | 103915 | 285245 | 20% |
| **124** Municipalities | 3206 | 219065 | 116626 | 157620 | 496517 | 36% |
| **528** Town Panchayats | 0 | 58801 | 32934 | 163110 | 254845 | 18% |
| **2** Cantonment Boards | 0 | 1391 | 600 | 1206 | 3347 | 1% |
| **Total- 666** | **47309** | **484105** | **341832** | **518363** | **1391609** | |

As on 31.08.2017

- Separate login ID and Pass word have been given to each 666 ULBs
- Training on every module of the MIS have been given to CLTCs / ULB staffs when ever required.
- Basic information of the city such as Ward, Slum and details of major banks have been updated before upload the details of the beneficiaries "Form 4B".
- Details of the beneficiaries information uploaded through ULBs staff after validation of relevant required documents
- ULBs are requested to change the pass word every alternative week.
- Weekly review meeting at ULBs level with all field officials and monthly review meeting at State level with all monitoring officials being conducted .
- Removal of duplicate entry by Aadhaar being done by every ULBs on daily basis.
- Out of 66146 duplicates found in MIS, 63477 duplicates have been removed so far and the balance 2669 yet to be removed .

- **Updation of details of the family members is in progress**
- **Updation of incorrect Aadhaar details is in progress.**
- **Application received through CSC and Online being validated, while doing validation , if found any discrepancy, the beneficiaries will be contacted over phone and guide them to go for suitable vertical.**
- **Applications received through CSC and Online from Rural area, these applications being communicated to SLNA for PMAY(G).**

# PMAY – HFA Media Coverage

The hindu 6/5/17

## 'Efforts on to make TN slum-free by 2023'

### Minister inspects construction of 685 dwelling units by the TNSCB at Peechankulam

SPECIAL CORRESPONDENT
TIRUCHI

The government was taking steps to achieve the objective of making the State slum-free by 2023 as outlined in the Vision 2023 announced by former Chief Minister Jayalalithaa, said Udumalai K. Radhakrishnan, Minister for Housing and Urban Development, here on Friday.

The former Chief Minister had announced that 10 lakh houses would be built under the Housing for All Mission.

During 2017-18, three lakh houses have been targeted to be built and about one lakh houses were currently under construction, he said after inspecting the construction of 685 dwelling units by the TNSCB at Peechankulam in the city on Friday. The project, being executed at an estimate of ₹46.35 crore, at Peechankulam would be completed soon, he added.

Later, Mr. Radhakrishnan chaired a regional level meeting with stake holders and district-level officers of



Minister for Housing and Urban Development Udumal[...] built by the TNSCB in Tiruchi on Friday. Minister Vellan[...] Collector K. S. Palanisamy are also seen. • PHOTO: A. MURA[...]

after the meeting said Tamil Nadu was in the forefront in obtaining approvals for pro-

housing units at a ₹8660.06 crore.

claries-led construction.

An assessment of housing requirement has been completed in Corporations, municipal towns and town panchayats and as per the demand assessment and online applications received, the requirement of houses was around 9.73 lakh.

In Tiruchi division of TNSCB, covering Tiruchi, Karur, Perambalur, Ariyalur, Thanjavur, Tiruvarur, Nagapattinam, Pudukottai, Cuddalore and Villupuram districts, the total housing requirement is about 2.37 lakh houses. So far, 332 projects envisaging the construction of 55,163 dwelling

---

## ரூ.2.10 லட்சம் மானியத்துடன் 3 லட்சம் வீடுகள் கட்டித்தர இலக்கு

• அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் தகவல்

திருச்சி

தமிழகத்தில் ரூ.2.10 லட்சம் மானியத்துடன் 3 லட்சம் வீடுகள் கட்டித்தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் திருச்சி பாலக்கரை பீச்சாங்குளத்தில் ரூ.46.35 கோடி செலவில் 685 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகளை நேற்று ஆய்வு செய்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் அனைவருக்கும் வீடு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில், 10 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும் என மறைந்த முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.



▲ தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் திருச்சி பாலக்கரை பீச்சாங்குளத்தில் ரூ.46.35 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்தார்.

1 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்றார்.

**10 மாவட்டங்களில் 55,163 வீடுகள்**

முதல்வர் ஜெயலலிதா விஷன் 2023' திட்டம், மத்திய பிரதமரின் அனைவருக்கும் ...ம்' ஆகியவற்றின் கீழ் ...ள்ள வீடற்ற அனைவருக்கும், ...க் தருவதற்கான பணிகள் ...ப்பட்டு வருகின்றன.

...களை விரைவுபடுத்தும் ... குடிசை மாற்று வாரிய ...மண்டலத்துக்கு உட்பட்ட ...திகாரிகளின் ஆலோசனைக் ...திருச்சி மாவட்ட ஆட்சியர் ...தில் நேற்று நடைபெற்றது. ...சதி மற்றும் நகர்ப்புற ...துறை அமைச்சர் உடுமலை

எம்.பி.க்கள் ப.குமார், ரத்தினவேலு, குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஷம்பு கல்லோலிகர், ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி, எம்எல்ஏக்கள் சந்திரசேகர் (மணப்பாறை), பரமேஸ்வரி (மண்ணச்சநல்லூர்), எம்.செல்வராஜ் (முசிறி), குடிசை மாற்று வாரிய தலைமை பொறியாளர் கே.ராஜா, கண்காணிப்பு பொறியாளர் ஆர்.சேதுபதி, நிர்வாக பொறியாளர்கள் எஸ்.சுரேஷ், தேவதாஸ் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் கூறும்போது "இந்த திட்டங்களின் கீழ் திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் ரூ.1886.23 கோடி மதிப்பில் 55,163 வீடுகள் கட்டும்

---

Times of India dt 6/5/17

## TN tops in Central nod for housing projects: Min

TIMES NEWS NETWORK

**Trichy:** Tamil Nadu stood first in the country in obtaining approval for housing projects from the central sanctioning and monitoring committee (CSMC) of the Union government, said state housing and urban development minister Udumalai K Radhakrishnan here on Friday.

**AFFORDABLE HOUSING**



› Requirement of houses in state - 9,73,434, claims TNSCB

---

## அனைவருக்கும் வீடு கட்டு...

### அமைச்சர் தலைமையில் ஆலோ...



---

## 2.46 லட்சம் வீடு!



அரசு மானியம் ₹ 2.10 லட்சம் கிடைக்கும்

# அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்திற்கு இன்று முதல் விண்ணப்பம்

## நகராட்சி அலுவலகங்களில் சிறப்பு முகாம்

நாகர்கோவில், ஏப்.24: குமரி மாவட்ட கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், திருநெல்வேலி கோட்டம் மூலம் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் குமரி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி பகுதிகளில் நகராட்சி மூலம் கணக்கெடுப்பு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி பகுதிகளில் விடுபட்ட பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று பட்டியல் தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்கு இன்று (24ம் தேதி), 25, 26 மற்றும் 28 தேதிகளில் குமரி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி அலுவலகங்களிலும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இந்தியாவில் வேறு எந்தப் பகுதியிலும் கான்கிரிட் வீடு இல்லாத, நலிவடைந்த பிரிவின் கீழ் (மாத வருமானம் ரூ.25,000) வாழும் குடும்பங்கள் தங்களுக்கு சொந்தமான மனையில் புதிய கான்கிரிட் குடியிருப்புகள் (300 சதுர அடி பரப்பளவு) கட்டுவதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியத் தொகையான ரூ.2.10 லட்சங்கள் பெற்று தாங்களாகவே வீடு கட்டிக் கொள்ளவும், அரசுக்குச் சொந்தமான ஆட்சேபகரமான நிலங்களில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு பயனாளிகளின் பங்களிப்புடன் அரசால் கட்டப்படும் குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெறவும் மற்றும் வங்கிகள் மூலமாக 6.5% வட்டிக்கான மானியத்திலும் கடன் பெற்று வீடுகள் கட்டவும், வாங்கிக் கொள்ளவும் விரும்பும் பயனாளிகள் பயன்பெறும் வகையில் இச்சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே பயனாளிகள் நகராட்சிகளில் நடைபெறும் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு விண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# பிரதம மந்திரி அனைவருக்கும் வீடு வசதி திட்டம் (PMAY-HFA)-URBAN

## கணக்கெடுப்பு தொடர்பாக

### தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்,
### திருநெல்வேலி கோட்ட நிர்வாகப் பொறியாளர் அவர்களின் அறிவிப்பு

இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவு விழாவினை கொண்டாடும் வகையில் 2022-க்குள் **"அனைவருக்கும் வீடு"** என்ற இலக்கினை அடைய (PMAY) பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புறம்) மூலம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் கீழ்க்கண்ட நான்கு வழி முறைகளில் (Verticals 1 to 4) ஏதேனும் ஒன்றில் பயனாளிகள் பயனடைவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**1. குடிசைப் பகுதிகளில் களமேம்பாடு (Slum Redevelopment)**

தகுதி வாய்ந்த குடிசைப்பகுதிவாழ் மக்களுக்கு வீடுகள் அமைக்க தனியார் பங்களிப்புடன் நிலத்தினை ( கூடுதல் FIS and TDR ) ஒரு வள ஆதாரமாக பயன்படுத்தி குடிசைப் பகுதிகளில் களமேம்பாடு அமைத்தல் மற்றும் அனைத்து குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அளித்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுபோன்ற திட்டங்களில் கட்டப்படும் தகுதி வாய்ந்த அனைத்து வீடுகளுக்கும் குடிசைப்பகுதி [illegible] மானியமாக ஒரு வீட்டிற்கு ரூ.1.00 இலட்சம் வழங்கப்படும்.

**2. வட்டிக்கான மானியத்துடன் கூடிய கடன் (Credit Linked Subsidy Scheme)**

நகர்ப்புற ஏழை மக்களின் வீட்டு வசதி தேவைகளுக்கான நிறுவன கடன் தொகை வழங்குவதை அதிகப்படுத்துவதற்காக, வட்டிக்கான மானியத்துடன் கூடிய கடன், தகுதி வாய்ந்த பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் (EWS) / குறைந்த வருவாய் பிரிவினர் (LIG) நகர்ப்புற ஏழைகளுக்கு வீடுகள் கட்ட / வாங்க தேவையினை பூர்த்தி செய்ய மானியத்துடன் கூடியகடன் வழங்கப்படும். பயன்பெறும் குடும்பங்கள் ரூ.6.00 இலட்சம் வரையிலானகடன் தொகையில் 20 ஆண்டுகளுக்கு 6.50% (சதவிகிதம்) வட்டிக்கான மானியம் பெற தகுதியுடையவர்.

**3. பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள் (Affordable Housing in Partnership)**

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கான (LIG) வீடுகளை அதிகரிக்க மாநில அரசுகள் அல்லது அதன் நிறுவனங்கள் அல்லது தனியார் பங்களிப்புடன் திறனுக்கேற்ப வீடுகள் கட்ட திட்டமிடலாம். அனைத்து நலிவடைந்த பிரிவினர்களுக்கான வீடுகளுக்கும் மைய அரசின் நிதி ஒரு வீட்டிற்கு ரூ.1.50 இலட்சம் வீதம் அளிக்கப்படும். மீதமுள்ள தொகை மாநில அரசு மற்றும் பயனாளிகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும். நகர்ப்புற பகுதிகளில் அரசுக்கு சொந்தமான ஆட்சேபகரமான நிலங்களில் குடியிருந்து வரும் பயனாளிகள் பயனடைவார்கள்.

**4. பயன்பெறும் பயனாளிகள் தாமாக வீடுகளை கட்டுதல் (Beneficiary LED Construction)**

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவின் கீழ் வாழும் தகுதிவாய்ந்த குடும்பங்கள் புதிய குடியிருப்பு (300 ச.அடி பரப்பளவில் கான்கிரீட் கூரைவீடு) கட்டுவதற்கு நிதியுதவி வழங்கப்படும். இது போன்ற பயனாளிகளுக்கு மைய மற்றும் மாநில அரசுகளின் மானியமான ரூ.2.10 இலட்சத்தினை, நான்கு தவணைகளில் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். நகர்ப்புற எல்லைக்குள் வாழும் குடும்பங்கள், தாங்கள் வாழும் இடத்திற்கான ஆதார் அட்டை மற்றும் நில உரிமைஆவணங்களை அந்தந்தநகர்ப்புற எல்லைக்குள் வைத்திருப்பவர்களாக இருப்பின் மேற்கூறப்பட்ட சலுகைகளைப் பெறலாம்.

மேற்கண்ட வழிமுறைகளின் அடிப்படையில் **கன்னியாகுமரி மாவட்ட நகராட்சி பகுதிகளில்** குடியிருந்து வரும் பயனாளிகள் பயனடைவதற்கு **24.04.2017** முதல் [illegible] வரை அந்தந்த **நகராட்சி அலுவலகங்களில்** சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. எனவே, பயனாளிகள் சிறப்பு முகாமில் விண்ணப்ப படிவத்தினை பெற்று, பூர்த்தி [illegible] பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மற்றும் **www.pmaymis.gov.in ----> citizen assessment** என்ற இணையதள முகவரியிலும் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விபரங்களுக்கு **www.mhupa.gov.in**

நிர்வாகப் பொறியாளர்
திருநெல்வேலி [illegible]

---

பிரதம மந்திரி அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம்

# நாகர்கோவில் நகராட்சியில் குவிந்த பொதுமக்கள்

## 28ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

நாகர்கோவில், ஏப்.25: இந்தியா சுதந்திரம் பெற்று 75வது ஆண்டு வருகிற 2022ம் ஆண்டு கொண்டாடப்படுகிறது. 75வது ஆண்டு கொண்டாடும் வேளையில் இந்தியாவில் வீடில்லாதவர்கள் இருக்ககூடாது என்ற அடிப்படையில் பிரதம மந்திரி அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் குடிசை மாற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 4 திட்டங்கள் மூலம் வீடு கட்டுவதற்கான நிதி உதவி வழங்கப்படுகிறது.

குடிசை பகுதிகளில் களமேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.1 லட்சம் வழங்கப்படுகிறது. வட்டிக்கான மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தின் கீழ் ரூ.6 லட்சம் வழங்கப்படுகிறது. இந்த தொகைக்கு நாம் 6.50 சதவீதம் வட்டியில் 20 ஆண்டுகள் வாங்கிய தொகையை திரும்ப செலுத்த வேண்டும். பங்களிப்புடன் திறன்கேற்ற வீடுகள் திட்டத்தின் கீழ் ரூ.1.50 லட்சம் மத்திய அரசும், மீதி தொகை மாநில அரசும் வழங்கும். பயன்பெறும் பயனாளிகள் தாமாக வீடு கட்டுதல் திட்டத்தின் கீழ் 300 சதுர அடி வீடு கட்ட மத்திய, மாநில அரசுகள் ரூ.2.10 லட்சம் வழங்கும்.

இத்திட்டங்களின் கீழ் வீடு இல்லாதவர்கள் பயன்பெற விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதன்படி நாகர்கோவில் நகராட்சி பகுதியில் 6223 பேர் விண்ணப்பித்து இருந்தனர். பொதுமக்கள் விண்ணப்பித்து இருந்ததை கடந்த 7ம் தேதி நகராட்சி நிர்வாகம் குடிசை பகுதி மாற்றும் வாரியத்திடம் ஒப்படைத்தது. விடுபட்டவர்கள் விண்ணப்பிக்கும் வகையில் குமரி மாவட்டத்தில் நாகர்கோவில், பத்மநாபபுரம், குழித்துறை, குளச்சல் ஆகிய நகராட்சியில் சிறப்பு முகாம் நடத்தப்படும் என கலெக்டர் சஜ்ஜன் சிங் சவான் அறிவித்து இருந்தார்.

அதன்படி 4 நகராட்சியில் நேற்று சிறப்பு முகாம் நடந்தது. நாகர்கோவில் நகராட்சியில் பிறப்பு இறப்பு பதிவு பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பங்கள் விநியோகம் செய்யும் நிகழ்ச்சி நேற்று காலை நடந்தது. விண்ணப்பம் விநியோகம் நிகழ்ச்சியை நகராட்சி ஆணையர் (பொறுப்பு) சுரேஷ்குமார் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் நகர அமைப்பு அதிகாரி ஜாய் கலந்து கொண்டார். விண்ணப்படிவங்களை குடிசை பகுதி மாற்றும் வாரியம் உதவி செயற்பொறியாளர்கள் செல்வம், மேரி கிறிஸ்டி ஆகியோர் பொது மக்களுக்கு வழங்கினர்.

நேற்று மாலை வரை 178 விண்ணப்பங்களை பொதுமக்கள் வாங்கி சென்றனர். இந்த சிறப்பு முகாம் வருகிற 28ம் தேதி வரை நடக்கிறது. இந்த முகாமில் விண்ணப்பங்களை வாங்கி உரிய ஆவணங்களுடன் 28ம் தேதிக்குள் பொதுமக்கள் விண்ணப்பிக்க வேண்டும். நகராட்சியில் 6223 பேர் விண்ணப்பித்து இருந்ததில் பயன்பெறும் பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் திட்டத்தின் கீழ் தான் அதிக அளவு விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என நகராட்சி ஆணையர் (பொறுப்பு) சுரேஷ்குமார் தெரிவித்தார்.



நாகர்கோவில் நகராட்சி அலுவலகத்தில் விண்ணப்ப விநியோகத்தை ஆணையர் (பொறுப்பு) சுரேஷ்குமார் தொடங்கி வைத்தார்.

**பேரூராட்சி பகுதி மக்களும் வருகை**

நாகர்கோவில் நகராட்சியில் நகர பகுதியில் உள்ள 52 வார்டு பகுதிகளிலும் வீடு இல்லாதவர்கள் விண்ணப்பிக்கும் வகையில் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அங்கு காலை முதலே விண்ணப்பங்கள் வாங்க அதிக அளவு பொதுமக்கள் குவிந்தனர். இந்நிலையில் நாகர்கோவில் நகராட்சியில் வசிப்பவர்களை தவிர்த்து கன்னியாகுமரி பேரூராட்சி, ஆரல்வாய்மொழி பேரூராட்சி, பூதப்பாண்டி பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் அதிக மக்கள் விண்ணப்பம் கேட்டு வந்தனர். [illegible] நகராட்சி பகுதி எல்லைகளை தவிர்த்து வேறு [illegible] செய்யப்படவில்லை.

---

# மாநகராட்சி, நகராட்சி பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டு வசதி திட்டம்

## கலெக்டர் கருணாகரன் தகவல்

நெல்லை, ஜூலை.9–

நெல்லை மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டு வசதி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்று கலெக்டர் கருணாகரன் தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:–

### வீட்டு வசதி திட்டம்

நகர்ப்புற மேம்பாட்டுக்காக மாவட்ட அளவிலான ஏழை மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்கு மத்திய அரசால் அனைவருக்கும் வீட்டு வசதி வழங்கும் வகையில், "பாரத பிரதமரின் வீட்டு வசதி திட்டம்" நெல்லை மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்பட

பங்கள் பெறப்படுகிறது.

### மானிய திட்டம்

இந்த திட்டத்தில் 4 வகைகளில் ஒன்றான, கடனுடன் இணைக்கப்பட்ட மானிய திட்டம் அடிப்படையில் வீடு வழங்கும் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது. அதாவது ரூ.3 லட்சத்துக்கு குறைவான வருமானம் உள்ள பிரிவினருக்கு 6.5 சதவீதத்துக்கு மேற்படும் வட்டிக்கு மானியத்துடன் அதிகப்படியாக 323 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடும், ரூ.3 லட்சம் முதல் ரூ.6 லட்சம் வரை வருவாய் உள்ள பிரிவினருக்கு 8.5 சதவீதத்துக்கு மேற்படும் வட்டிக்கு மானியத்துடன் அதிகபட்சம் 646 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடும் வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதி

மாநகராட்சி அல்லது நகராட்சி ஆணையாளரை தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொண்டு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு கலெக்டர் கருணாகரன் தெரிவித்துள்ளார்.



▲ சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் கணினி மூலம் திட்ட அனுமதி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இணையதளம் மற்றும் தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் இணைய நேரடியாக விண்ணப்பிக்கும் வசதியை முதல்வர் கே.பழனிசாமி, தலைமைச் செயலகத்தில் நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குடிசை மாற்று வாரியம் சார்பில்

# ரூ.603 கோடியில் குடியிருப்புகள்

● முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்

சென்னை

குடிசை மாற்று வாரியம் சார்பில் காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில் ரூ.603 கோடியே 18 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை முதல்வர் கே.பழனிசாமி நேற்று திறந்துவைத்தார். மேலும், திட்ட வரைபட அனுமதி மற்றும் கட்டிடம், மனை ஒழுங்குபடுத்த விண்ணப்பிக்கும் இணையதளங்களையும் தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் தூத்துக்குடியில் காந்தி நகர் திட்டப்பகுதியில் 5.12 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.29 கோடியே 15 லட்சத்தில் 444 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. குடியிருப்பு ஒவ்வொன்றும் 341 சதுரஅடி பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதில், மழைநீர் வடிகால், கழிவுநீரகற்று வசதி உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வேலூர் - குளவிமேட்டில் ரூ.15 கோடியே 90 லட்சத்தில் 192 அடுக்குமாடி குடியிருப்புகள், காஞ்சிபுரம் - சோழிங்கநல்லூரில் ரூ.496 கோடியே 69 லட்சத்தில் ஆயிரத்து 500 குடியிருப்புகள், திருவள்ளூர் - நொளம்பூரில் ரூ.7 கோடியே 33 லட்சத்தில் 24 மற்றும் அம்பத்தூரில் ரூ.29 கோடியே 63 லட்சத்தில் 92 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் - மதுராந்தகத்தில் ரூ.1 கோடியே 44 லட்சத்தில் குறைந்த வருவாய் பிரிவினருக்கான 14 வீடுகள், வேலூர் - சத்துவாச்சேரியில் ரூ.16.38 லட்சத்தில் 64 குடியிருப்புகள், மதுரை - ஆனையூரில் ரூ.5 கோடியே 62 லட்சத்தில் 32 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூ.1 கோடியே 4 லட்சத்து 50 ஆயிரத்தில் நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அலுவலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறாக ரூ.603 கோடியே 18 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள், அலுவலக கட்டிடங்களை முதல்வர் கே.பழனிசாமி நேற்று திறந்து வைத்தார்.

மேலும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் கணினி மூலம் திட்ட அனுமதி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட 'www.ppacmda.tn.gov.in' என்ற இணையதளத்தையும் முதல்வர் தொடங்கி வைத்தார். இதன் மூலம் திட்ட அனுமதி விண்ணப்பங்கள், அதற்கு தேவையான ஆவணங்கள், திட்ட வரைபடங்கள் போன்றவற்றை சமர்ப்பிக்கலாம். விண்ணப்பங்கள் சமர்ப்பித்ததும் அதற்கான உள்நுழைவு (லாகின்) பெற முடியும். இதன் மூலம் கட்டிட விண்ணப்ப நிலையும் அறியலாம்.

இதுதவிர, தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் 'www.tnrera.in' என்ற இணையதளத்தில் நேரடியாக விண்ணப்பிக்கும் வசதியையும் முதல்வர் தொடங்கி வை இதன்மூலம் கட்டிட மனை பாட்டாளர்கள் தங்கள் பணிகளையும், தங்கள் பதிவுகளையும் இ தளம் மூலம் சமர்ப்பிக்க பதிவு செய்யப்பட்ட கட் திட்டங்கள் பற்றிய தற்போ நிலையை பொதுமக்கள் அ கொள்ள இந்த இணைய இல் வழிவகை செய்யப் எது.

கட்டுமான திட்டப்பணி குறைகள் குறித்து பொது புகார் தெரிவிக்க இந்த இ தளம் உதவி புரியும்.

நிகழ்ச்சியில் துணை மு ஓ.பன்னீர்செல்வம், துறை அமைச்சர் உடுமலை தலைமைச் செயலர் கிரிஜா தியநாதன், தமிழ்நாடு வீட்டு வாரிய தலைவர் பி.கே.வைர முத்து, வீட்டு வசதித் துறை செயலர் டி.பி.யாதவ் உள் ளிட்டோர் பங்கேற்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சட்டசபையில் முதல்-அமைச்சர் அறிவிப்பு

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், தமிழகம் முழுவதும் சுமார் ரூ.7 ஆயிரம் கோடி செலவில் 2 லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் கட்டப்படும் என்று சட்டசபையில் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து உள்ளார்.

சென்னை, ஜூலை.4- தமிழக சட்டசபையில் நேற்று 110-வது விதியின் கீழ் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி சில அறிவிப்புகளை வெளியிட்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

### புதிய குடியிருப்பு கொள்கை

### பிரதமரின் வீட்டுவசதி திட்டம்

புத் தொகை மற்றும் தமிழக அரசால் அளிக்கப்படும் பற்றாக்குறை நிதி ஆகியவற்றை பயன்படுத்தி, குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம், எண்ணூரில் 676 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,874 வீடுகள் கட்டித்தரப்படும்.

புகளுக்கு மாநில அரசின் மானியமாக 2,007 கோடியே 53 லட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

### தனியாக பணி விதிகள்

### புற்றுநோய் மையம்

### எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி

பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ்

# ₹5,589 கோடி செலவில் 1,86,308 தனி வீடுகள்



யில் நேற்று, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி உள்ளிட்ட துறைகளில் 110விதியின் கீழ் புதிய அறிவிப்புகளை டி முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பேசுகிறார்.

## வர் எடப்பாடி பழனிச்சாமி அறிவிப்பு

செலவை குறைத்தல், பொருளாதாரத்தில் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய் பிரிவினரை உள்ளடக்கிய அனைவருக்கும் போதுமான வீட்டுவசதியினை கிடைக்க செய்தல், வாங்கத் தக்க விலையில் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடுகள் கட்ட இடம் ஒதுக்கீடு செய்தல், அடிப்படை வசதிகளான மின்சாரம், குடிநீர் மற்றும் சாலை வசதிகளுடன் கூடிய வீடு வழங்கும் முறையை உருவாக்குதல் போன்றவை இந்த கொள்கையின் சிறப்பு அம்சங்களாகும்.

சதி திட்ட நிதி, சிறப்பு மாநகர வளர்ச்சி உரிமை சான்றிதழ் மூலம் திரட்டப்படும் நிதி, பயனாளிகளின் பங்களிப்பு தொகை மற்றும் தமிழக அரசால் அளிக்கப்படும் பற்றாக்குறை நிதி ஆகியவற்றை பயன்படுத்தி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம், எண்ணூரில் ₹676 கோடியே 61 லட்சம் செலவில் 6,874 வீடுகள் குடிசை பகுதியில் வாழும் மக்களுக்கு கட்டித் தரப்படும்.

• பிரதமரின் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தில் பயனாளிகள்

வகைப்பாட்டின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1,86,308 தனி வீடுகள் ₹5,589 கோடியே 24 லட்சம் செலவில் கட்டப்படும். மேலும், நடப்பாண்டில் பயனாளிகள் பங்களிப்புடன் வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் கட்டும் வகைப்பாட்டின் கீழ் ஒரு குடியிருப்பு ரூ.10 லட்சம் வீதம் 14,828 அடுக்குமாடி குடியிருப்புகள் ₹1,482 கோடியே 80 லட்சம் செலவில் கட்டப்படும். மேற்கண்ட இரண்டு வகைப்பாட்டின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு மாநில அரசின் மானியமாக ₹2,007 கோடி அளிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# Most allocations under PM housing scheme in TN

Yogesh.Kabirdoss
@timesgroup.com

**Chennai:** With the Tamil Nadu government urging the Centre to increase the allocation under the Pradhan Mantri Awas Yojana (Urban) scheme, the Union government is likely to enhance the number of houses for the ambitious flagship programme for the state. About 3.5 lakh houses are expected to be added to the state's kitty, which will help it top the country in terms of allocation. So far, the Centre has earmarked 2.49 lakh houses for the Pradhan Mantri Awas Yojana to Tamil Nadu.

Senior officials of the Union housing and urban affairs, who reviewed various housing schemes in Chennai on Friday, have sought the state housing and urban development department to send a demand survey for the purpose. "Presently, Tamil Nadu is the second lea[illegible] allocation next only to Andhra Pradesh. At least 3.5 lakh more houses could be allocated after we receive the demand survey from the state government," a top official with the Union housing and urban affairs told **TOI** after the meeting here. The official further said the state is progressing with regard to implementation of the Pradhan Mantri Awas Yojana (Urban) scheme.

> **Eligible beneficiaries get subsidy upto ₹2.30 lakh under the scheme, which is directly credited to the loan account of the respective home buyers**

Eligible beneficiaries get subsidy upto ₹2.30 lakh under the scheme, which is directly credited to the loan account of the respective home buyers. "This subsidy would help in reducing the loan amount for the buyer," said P Suresh, a leading budget home developer. The scheme has been extended to middle income groups (MIG), with annual income up to ₹18 lakh to realise the mission of Housing for All by 2022.

Meanwhile, the Union ministry officials also discussed about the Real Estate Regulation Act for Tamil Nadu and Andaman and Nicobar Islands. "We were told that the registration of housing projects with the Tamil Nadu Real Estate Regulation Authority (TNRERA) are being done manually. The online facility for the purpose would be activated in a few days," the ministry official added. Though an official portal for TNRERA was unveiled a month ago, the website is yet to be equipped with uploading documents. The realty regulator in Tamil Nadu is also the authority for Andaman and Nicobar Islands with regard to RERA.




Notice distributed to public

# AWARENESS PROGRAMME & LOAN MELA












## Current Status of Demand survey in Tamil Nadu as perPMAY- MIS:

| | |
|---|---|
| 1.Total no of potential beneficiaries are entered in MIS | - 18,65,939 |
| (ULB – 7,48,159 , CSC- 8,86,080 , Online -2,31,700 ) | |
| 2.Validated | - 12,61,004 |
| (ULB – 7,48,159 ,CSC- 4,29,053 , Online -88,892 ) | |
| 3.Having valid Aadhaar | - 12,30,714 |
| 4.Having phone No. | - 10,22,279 |
| 5.Bank Details | - 8,86,833 |
| 6.Minority | - 1,26,894 |
| 7.Transgendar | - 280 |

# Beneficiary Attachment

- Details of the projects (7B /7C) will be entered in MIS after approval of SLSMC meeting

- After approval of SLSMC and Beneficiaries whose Aadhaar validated , they will be attached with their concern project.

- Beneficiaries whose Aadhaar are invalid , their document will be again verified and they will be requested to make correction if any, through Aadhaar Center .

- Duplicates in attachment ,being removed through modification request after verification done by SLNA .

- Beneficiaries wrongly attached with other projects ,will be removed through Modification request after that, will be attached with concern project.

# Beneficiary Attachment

- Attached beneficiaries will be compared with the list of beneficiaries benefitted under Vertical II (CLSS) on monthly basis to find the duplicates.

- So far 2800 beneficiaries have been removed from attachment through Modification Request.

- 2200 beneficiaries are yet to be removed from their attachment ,approval awaited from GOI.

# Beneficiary Attachment

| Sl. No. | DESCRIPTION | AHP | BLC | Total |
|---|---|---|---|---|
| 1. | No. of Projects | 170 | 1926 | **2096** |
| 2. | Dwelling Units Approved | 84107 | 417105 | **501212** |
| 3. | Project entered (7B /7C) | 170 | 1926 | **2096** |
| 4. | Beneficiaries Attached | 24243 (29 %) | 369375 (88 %) | 393618 (79%) |
| 5. | Aadhaar Seeded | 22571 | 356431 | **379002** |



# THANK YOU